

புதுதில்லியில் நேற்று (11.8.2025) ஒன்றிய அரசின் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானாந்தா சோனோவால் அவர்களை தமிழ்நாடு அரசின் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் சந்தித்து சாகர்மாலா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் மேம்படுத்தப்பட வேண்டிய சிறு துறைமுகத் திட்டங்களை விரைவில் செயல்படுத்த வலியுறுத்தி கோரிக்கை மனுவினை வழங்கினார். இந்நிகழ்வின்போது தமிழ்நாடு அரசின் புதுதில்லி தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், தமிழ்நாடு அரசின் பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, தமிழ்நாடு கடல்சார் வாரிய முதன்மைச் செயலாளர் தி.கே. வெங்கடேஷ், தமிழ்நாடு அரசின் உள்ளுறை ஆணையாளர் ஆஷிஷ் குமார், சிறப்பு தொழில்நுட்ப பொறியாளர் சந்திரசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



சென்னை. நங்கநல்லூர் ஆஞ்சநேயர் திருக்கோயிலில் புதிய தங்கத் தேருக்கு 9.5 கிலோ கிராம் எடை கொண்ட தங்கத்தை கொண்டு தங்க ரேக் பதிக்கும் பணியை அமைச்சர்கள் தா. மோ. அன்பரசன், பி.கே.சேகர்பாபு ஆகியோர் தொடங்கி வைத்தனர். உடன் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., பி.என். ஸ்ரீதர், டாக்டர் சி.பழனி, திருமதி இரா. வான்மதி, திருமதி கி. ரேணுகாதேவி. மண்டல குழு தலைவர் என். சந்திரன், இரா. ஹரிஹரன், உதவி ஆணையர் கி.பாரதிராஜா, திருக்கோயில் தக்கார் எம். கோதண்டராமன், ஆ. குமரேசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஆசிய அலைச்சறுக்குப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்க வருகை தரும்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு கானத்தூர் - மாமல்லபுரத்தில் கழகத்தினர் உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்– அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!

மாமல்லபுரம், ஆக.12–

மாமல்லபுரத்தில் நடைபெற்ற ஆசிய அலைச்சறுக்கு போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கும் விழாவில் பங்கேற்று பரிசுகளை வழங்க இன்று 12 -ஆம் தேதி மாலை மாமல்லபுரத்திற்கு வருகை தரும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கானாத்தூர் மற்றும் மாமல்லபுரத்தில் ஆகிய 2 இடங்களில் கழகத்தினர் பெருந்திரளாக திரண்டு நின்று உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை–



மாமல்லபுரத்தில் நடைபெற்ற ஆசிய அலைச் சறுக்கு சாம்பியன் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா இன்று (12.8.2025) மாலை 4.30 மணியளவில் மாமல்லபுரம் ரேடிசன் புளூ ஓட்டல் கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

மாண்புமிகு துணை முதல்வர் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு ஆசிய அலைச்சறுக்கு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரை ஆற்ற உள்ளார்.

மாமல்லபுரத்தில் நடைபெறும் இவ்விழாவிற்கு வருகை தரும் மாண்புமிகு இளையதலைவர் அவர்களுக்கு சென்னை கிழக்குக் கடற்கரை சாலையில் கானாத்தூர் மற்றும் மால்லபுரம் ஆகிய 2 இடங்களில் உற்சாக வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

கானாத்தூரில் அளிக்கப்படும் வரவேற்பில் திருப்போரூர் வடக்கு ஒன்றியம் – தெற்கு ஒன்றியம் & பேரூர் கழகத்தினர் பெருந்திரலாக கலந்துகொள்ள உள்ளனர்

மாமல்லபுரத்தில் உள்ள மாமல்லன் சிலை சந்திப்பில் நடைபெறும் வரவேற்பில் மாவட்ட கழக நிர்வாகிகள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குமு-பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய - நகர- பகுதி- பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் மாமல்லபுரம் நகர கழகத்தினரும், திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் & பேரூர், கழகத்தினரும் பங்கேற்க உள்ளனர்.

மாமல்லபுரத்தில் நடைபெறும் வரவேற்பில் கழகத்தினர் அனைவரும் பெரும் கூட்டமாக திரண்டு நின்று வரவேற்பு அளிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் அறிக்கையில் கூறியுள்ளார்.

### ஒன்றிய அரசின் கண்காணிப்பிலுள்ள NAAC மூலம்

# கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் தரச்சான்றிதழ்களில் முறைகேடுகள் நடைபெறுகிறதா?

## நாடாளுமன்றத்தில் தயாநிதி மாறன் எம்.பி கேள்வி!

புதுடெல்லி, ஆக 12–

தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று அவை (NAAC), இந்தியாவின் உயர்கல்வி நிறுவனங்களை மதிப்பிட்டு தரவரிசைப்படுத்தும் பணியை பணியை செய்து வருகிறது. அந்த வகையில் பல கல்வி நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களுக்கு உயர் தரச்சான்று பெறுவதற்காக முறைகேடுகளில் ஈடுபடுவதாக வந்த செய்திகளின் அடிப்படையில், கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் ஒன்றிய கல்வித்துறை அமைச்சகத்திடம் NAAC தரச்சான்றிதழ் வழங்குவதில் முறைகேடுகள் நடந்துள்ளனவா? மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும், உயர் கல்வி நிறுவனங்களின் தரச்சான்றிதழுக்கான மதிப்பீட்டில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தவும் அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன என்பன போன்ற பல்வேறு கேள்விகளை வினவியுள்ளார்.



அதன் விவரங்கள் பின்வருமாறு :–

தேசிய மதிப்பீடு மற்றும் தரச்சான்று அவை (NAAC) மூலம் பல கல்வி நிறுவனங்கள் தங்களுக்கு உயர் தரச்சான்று பெறுவதற்கு முறைகேடுகள் செய்ததாக புகார்கள் வந்துள்ளனவா? மேலும், NAAC–லிருந்து சுமார் 20% மதிப்பீட்டாளர்கள் நீக்கப்பட்டுள்ளனரா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? கடந்த மூன்று ஆண்டுகளில் தரவரிசை பெறத் தவறிய கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

கடந்த மூன்று ஆண்டுகளில் தரவரிசை பெறத் தவறிய கல்வி நிறுவனங்களின் மொத்த எண்ணிக்கை, ஆண்டு வாரியாக எவ்வளவு?

மக்களின் நம்பிக்கையை மீட்டெடுக்கவும், உயர்கல்வி நிறுவனங்களின் மதிப்பீட்டில் வெளிப்படைத் தன்மையை உறுதிப்படுத்தவும் அரசு எடுக்கும் நடவடிக்கைகள் என்ன?

தரவரிசை முறை மற்றும் சான்றுரை அடிப்படையிலான மதிப்பீடுகளை அதிகம் சார்ந்திருப்பதால் ஏற்படும் பாதிப்புகளை, குறிப்பாக மனிதவியல் மற்றும் சமூக அறிவியல் துறைகளில், அரசு ஆய்வு செய்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

மதிப்பெண் அடிப்படையிலான மதிப்பீடுகளுக்கு பதிலாக, சக மதிப்பாய்வு செய்யப்பட்ட, சூழல் உணர்திறன் மற்றும் துறை சார்ந்த மதிப்பீட்டு முறைகளை அறிமுகப்படுத்த அரசு திட்டமிடுகிறதா?

உயர்கல்விக்கான பொது நிதியை அதிகரிக்கவும், மானியங்கள், ஒப்புதல்கள் மற்றும் அங்கீகாரத்திற்கான தரவரிசையில், ஒழுங்குமுறை ஆணையத்தின் சார்புநிலையைக் குறைக்கவும் ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் அது எப்போது நடைமுறைக்கு வரும்? இல்லையெனில், அதற்கான காரணங்கள் என்ன?

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! எ.நாகராசன் தலைமையில்

# கொளத்தூர் மேற்குப் பகுதி சார்பில் கலைஞர் நினைவு நாள் மாபெரும் பொதுக்கூட்டம்!

## எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. – அ.அன்வர்ராஜா – நாஞ்சில் சம்பத் சிறப்புரை!

சென்னை, ஆக.12

கொளத்தூர் மேற்கு பகுதி சார்பில், ஆகஸ்ட் 7 முத்தமிழறிஞர் கலைஞர் ஏழாம் ஆண்டு நினைவு நாள் போராளி ஓய்வதில்லை நினைவை போற்றி, மாபெரும் பொதுக்கூட்டத்தில் டாக்டர் S. ஜெகத்ரட்சகன் எம்.பி, அ.அன்வர்ராஜா, நாஞ்சில் சம்பத் ஆகியோர் புகழுரைக்கின்றனர்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக, கொளத்தூர் மேற்கு பகுதி சார்பில் ஆகஸ்ட் 7 முத்தமிழறிஞர் ஏழாம் ஆண்டு நினைவு நாள் போராளி ஓய்வதில்லை நினைவை போற்றி கலைஞர் - கலைஞரின் மொழி தனித்துவம்! திராவிட மாடலே சமத்துவம்!! எனும் தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நாளை (13-8-25 புதன் கிழமை) மாலை 6.00 மணியளவில் அகரம், பெரவள்ளுர் சதுக்கத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் பகுதி கழக செயலாளர் எ.நாகராசன் எம்.சி தலைமை வகிக்க. மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான பி.கே.சேகர்பாபு, பகுதிச் செயலாளர் ஐ.சி.எப்.வ. முரளிதன், சி.மகேஷ்குமார், கே.சந்துரு, சரிதாமகேஷ்குமார் எம்.சி, வானவில்விஜய், தேவஜவஹர், எஸ்.பன்னீர்செல்வம், எஸ். தனசேகர், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், என். திலிப்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இரா.தயாளன், எம்.சாக்ரடீஸ், வி.வெங்கடேசன், ஆர். காஞ்சனா. என்.சௌந்தர், என். பவுல்ராஜ், எஸ்.முருகன், என். ராமச்சந்திரன், எம்.டி.தமிழ்ச் செல்வன், எம்.தாவுத்பீ, சி.ஸ்ரீதணி, டி.யோகபிரியா, பி.அமுதா ஆகியோர் வரவேற்கின்றனர்.

கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, கழக இலக்கிய அணி தலைவர் அ.அன்வர்ராஜா, திராவிட இயக்க போர் முரசம் நாஞ்சில் சம்பத் ஆகியோர் புகழுரைக்கின்றனர்.

மேலும், மேயர் பிரியா ராஜன், டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி, வழக்கறிஞர் இரா. கிரிராஜன் எம்.பி, ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, ப. ரங்கநாதன், இரா.விடுதலை, மாநில நிர்வாகிகள் : கே.எஸ். ரவிச்சந்திரன் சங்கரிநாராயணன் மிறர் நன்மாறன் தமிழன்பிரசன்னா பி.கே.மூர்த்தி எஸ்.மணிமுடி ஆர்.வரதன் கே.எஸ்.எம்.நாதன் எம்.விஜயகுமார் பரிதிஇளம்சுருதி என். பி.எம்.ஷேக்அப்துல்லா வே. உமாகாந்த் இந்திரஜித் மாவட்ட நிர்வாக்கள் : கோ.ஏகப்பன் ஜி. எம்.தேவன் புனிதவதிஎத்திராசன் இசட்.ஆசாத். பகுதிச் செயலாளர்கள் கூ.பி.ஜெயின் வே.வாசு எம்.சாமிகண்ணு செ.தமிழ்வேந்தன் டி.எஸ்.பி. இராஜகோபால் எம்.டி.ஆர்.நாகராஜன் எஸ்.முரளி சொ.வேலு எஸ்.ராஜசேகர் வி.சுதாகர் உள்ளிட்ட மாவட்ட, பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள் , அணிகளின் நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழக நிர்வாகிகள் ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி நன்றி கூறுகின்றனர்.

## ‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!






தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ”போதைப்பொருட்கள் இல்லாத தமிழ்நாடுமாநில அளவிலான பெருந்திரள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி காணொலி காட்சியின் வாயிலாக நடைபெற்றதைத் தொடர்ந்து, காஞ்சிபுரம் கீழ்கதிர்பூர் தனியார் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன், காவல்துறை சரக துணைத் தலைவர் நா.தேவராணி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கி.சண்முகம், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் திருமதி.எம்.மகாலட்சுமி யுவராஜ், சார் ஆட்சியர் ஆஷிக் அலி, ஆகியோர் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

## இதுவரை ரூ.6 கோடியே 29 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

### 2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

### 2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

## கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

## நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

# இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 29 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்)** 11–08–2025 அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

### நிதி உதவி பெறுவோர் விவரம்

| | | |
|---|---|---|
| 1. | எம்.வேலு, டி.கே.எஸ்.நகர், 1வது மெயின் ரோடு, சென்னை –19 | 25,000/–– |
| 2. | கோ.முத்துகிருஷ்ணன், மேல்நல்லாத்தூர், திருவள்ளூர் மாவட்டம். | 25,000/– |
| 3. | எம். ரமேஷ், கடப்பேரி, மதுராந்தகம், செங்கல்பட்டு மாவட்டம். | 25,000/– |
| 4. | கோ.பிச்சாண்டி, கல்லேரி,கொண்டசமுத்திரம், குடியாத்தம், வேலூர் மாவட்டம் | 25,000/– |
| 5. | பி. ஏழுமலை, டாக்டர் அம்பேத்கார் வீதி, வானூர் கிராமம், விழுப்புரம் – 109 | 25,000/– |
| 6. | க.தம்பிராஜா, வல்லம், தச்சக்காடு அஞ்சல், புவனகிரி, கடலூர் மாவட்டம். | 25,000/– |
| 7. | ஆர். சுகுமார், நரசிங்கன்பேட்டை, திருவிடைமருதூர், தஞ்சை மாவட்டம். | 25,000/– |
| 8. | மு.பகுருதீன், பொதக்குடி, சேகரை, கூத்தாநல்லூர், திருவாரூர் மாவட்டம். | 25,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,00,000/-** |